# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

------

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUVOTTIYUR

| | | |
|---|---|---|
| **Calendar** | : | |
| **Miscellaneous** | : | |
| **Preliminary Register** | : | **Case No. CC/ 190/2022** |
| **Sessions** | : | |
| **Deposition of witness for** | : | **Prosecution PW4** |
| **Name** | .. | திரு. தாமோதரன் காவல் உதவி ஆய்வாளர் M6 மணலி காவல் நிலையம் |
| **Father's/Husband's Name** | .. | வெங்கடபதி |
| **Village** | | |
| **Taluk** | .. | |
| **Caste** | .. | |
| **Calling** | .. | |
| **Religion** | .. | |
| **Age** | .. | **57** |

**Date: 07.04.2026**

**(Solemnly affirmed before this court under act X of 1969)**

**எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. வழக்கறிஞரால் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

முதல் விசாரணை

1. நான் தற்போது காவல் உதவி ஆய்வாளராக M6 மணலி காவல் நிலையத்தில் பணிபுரிந்து வருகிறேன். திரு. சரவணன் காவல் உதவி

ஆய்வாளர் வயது மூப்பின் காலமாகிவிட்டார். அவருடைய இறப்பு சான்றிதழ் தற்போதைய காவல் ஆய்வாளர் மணலி அவர்களால் தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. அதன் பெயரில் தற்போது நான் இவ்வழக்கின் விசாரணை அதிகாரிக்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன்.

2. உதவி ஆய்வாளர் சரவணன் கடந்த 25.03.2022 அன்று காலை 10.00 மணிக்கு நிலைய ஆஜரில் இருந்த போது பரமேஸ்வரி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று M6 மணலி காவல் நிலைய குற்ற எண் 123/2022, சட்டப்பிரிவுகள் 294(b), 323, 506(i) IPCன் கீழ் வழக்கு பதிவு செய்து விசாரணைக்கு எடுத்துக்கொண்டார். முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).

2. பின் சம்பவ இடம் சென்று சம்பவயிட சாட்சிகள் வாசுதேவன் மற்றும் சந்தோஷ் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தினை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். (பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ 3 மற்றும் 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).

3. சாட்சிகள் பரமேஸ்வரி, சுரேஷ், ஜெயராமன், மகேஷ், வாசுதேவன் மற்றும் சந்தோஷ் ஆகியோர்களை விசாரித்து வாக்கு மூலம் பதிவு

செய்துள்ளார். கடந்த 25.03.2022 அன்று மதியம் சுமார் 12.00 மணியளவில் மணலி மார்க்கெட் சந்திப்பு அருகே இருந்த எதிரி அப்துல் ரஹீம் என்பவரை கைது செய்து நிலையம் கொண்டு வந்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். பின்பு விசாரணை முடித்து இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாணை :-

ஆவணங்களின் அடிப்படையில் தான் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். இவ்வழக்கை நான் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் தவறுதலாக இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த ஒரு சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

K KARTHIK
Digitally signed by K KARTHIK
Date: 2026.04.06 16:45:05 +0530

நீதித்துறை நடுவர்,
திருவொற்றியூர்